
# நோயாளர்களைப் பராமரித்தல்



# நோயாளர்களைப் பராமரித்தல்

பொதுவாக நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வரும்போது அவர்கள் உடல்ரீதியாகவோ உளரீதியாகவோ பாதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். நோய் ஒருவருக்கு ஏற்படும் இடத்து அது அவரது வழமையான உடல், உளசெயற்பாடுகளை பாதிக்கக் கூடும். இப்பாதிப்பு அவருடைய தனிப்பட்ட இயல்புகளிலும், ஏற்படுகின்ற நோயின் தன்மை, தாக்கத்தை பொறுத்து வேறுபடும். இதனால் நோயாளர் வைத்தியசாலைக்கு வரும் போது மேற்குறிப்பிட்ட தாக்கங்களில் இருந்து முற்றாக விடுபடலாம் என்ற நம்பிக்கையுடனேயே வருகின்றனர். எனவே நோயாளர்களை பராமரிக்கும் உங்கள் பொறுப்பு முக்கியமானது. இக்கடமையை சரிவர செய்யக் கூடிய வழிமுறைகள்

★ பராமரிப்பவர் அன்பு, பொறுமை, உண்மை, தன்னடக்கம் உடையவராக இருத்தல்.

★ நோயாளர்களது நோயைப் பற்றி அடிப்படையான சிலவற்றை அறிந்து கொள்வதுடன் அவற்றினால் ஏற்படக்கூடிய உடல், உள தாக்கங்களை புரிந்து கொள்ளுதல்.

★ நீங்கள் நோயாளரை பராமரிக்கும் அதே வேளை அந்நோய் உங்களை தொற்றக்கூடியதாக இருப்பின் அதிலிருந்து உங்களையும் மற்றவரையும் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளை பின்பற்றுதல். உ~ம்:~ தடுப்பு மருந்தைப் பாவித்தல்

★ நோயாளர்கள் தங்களது வழமையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற இயலாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் உதவி செய்தல். உ~ம்:~ மலசலம் கழித்தல், உணவு அருந்துதல்.

★ நோயாளர்களினது நோய் விரைவில் குணமடையும் என ஆறுதல் வார்த்தை கூறி நம்பிக்கை ஊட்டல்.

★ வைத்தியர்கள், தாதியர்களின் ஆலோசனைகள், புத்திமதிகள் என்பவற்றை பின்பற்றி நோயாளர்களை பராமரித்தல்.

மேற் குறிப்பிட்டவற்றை செயற்படுத்துவதற்கு நீங்கள் பின்வருவனவற்றை கைக்கொள்ள வேண்டும்.

★ நோயாளியின் படுக்கையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க உதவி செய்தல் (படுக்கை விரிப்புக்கள் அழுத்தமாகவும், சுருக்கம் இல்லாமலும் இருக்குமாறு ஒழுங்கு படுத்தல் வேண்டும்)

★ தொடர்ச்சியாக படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு படுக்கை புண்கள் வராமல் தடுப்பதற்கு நோயாளியின் படுக்கும் நிலையை குறைந்தது 2 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மாற்றுவதற்கு உதவுதல் வேண்டும்.

★ வைத்தியரின் அல்லது தாதியரின் ஆலோசனைப்படி படுக்கை நிலையை வைத்திருப்பதற்கு நோயாளிக்கு உதவுதல் வேண்டும். உ-ம்:- சுவாசிக்க கடினமான நோயாளிக்கு சரிவாக படுக்கை அமைத்தல்.

★ நோயாளி செயற்படும் இயல்பைப் பொறுத்து நோயாளி மலசலம் கழிக்க செல்லும் போது அவருடன் கூடச் சென்று உதவுதல், அவர் நடக்க முடியாதவராயின் தகுந்த முறையில் மலப்பாத்திரம், சலப்பாத்திரம் பாவித்தல் வேண்டும்.

★ நோயாளி மலம் கழித்த பின்னர் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுவதற்கு உதவி செய்வதுடன் பராமரிப்பாளரும் சவர்க்காரம் போட்டு கைகழுவுதல் வேண்டும்.

★ நோயாளரின் உடல் சுத்தமாக வைத்திருக்க உதவுதல் அத்துடன் நகங்களை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வெட்டிவிடுதல் வேண்டும்.

★ ஒவ்வொரு சாப்பாட்டின் பின்பும் குறிப்பாக இரவு சாப்பாட்டின் பின் நோயாளருக்கு பல்துலக்கி வாய் சுத்தத்தை பேணிவிடுதல் இதற்கு பற்தூரிகைகள், பற்பசை, ரங்கிளினர் (நாக்கு சுத்தமாக்கி) என்பவற்றை பயன்படுத்துதல் வேண்டும்.

★ உணவுகளை கையாள முன்னர் உங்கள் கைகளை சவர்க்காரமிட்டு கழுவிக்கொள்ளுதல் அத்துடன் நோயாளரின் கைகளையும் பாவிக்கும் சந்தர்ப்பத்தில் சவர்க்காரமிட்டு நன்றாக கழுவுதல் வேண்டும்.

★ நோயாளருக்கு மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் உணவுகளை மாத்திரம் சரியான அளவில் சரியான நேரத்தில் கொடுக்க வேண்டும். உ~ம்:~ நீரிழிவு நோயாளிக்கான உணவு.

★ மருந்து உட்கொண்ட பின்னர் நோயாளியில் ஏதாவது மாற்றங்கள் (உடல், உள) ஏற்பட்டால் அவற்றை வைத்தியருக்கோ அல்லது தாதிய ருக்கோ தெரியப்படுத்தல் வேண்டும்.

★ நோயாளியின் இரத்தம், கழிவுப்பொருட்களை நேரடியாக வெற்று கைகளினால் கையாழுவதை தவிர்த்தல், இதற்காக கையுறைகள் இருப்பின் பாவித்தல் வேண்டும்.

★ நோயாளியின் உடலில் இருந்து பரிசோதனைப் பொருட்கள் சேகரிப்பதற்கு தாதிமார்களுக்கு உதவுதல் வேண்டும். உ-ம்:- சலம், மலம், இரத்தம்

★ மருத்துவமனையிலும் மலசலகூடத்துக்குள்ளும் கட்டாயம் நீங்களும் நோயாளியும் பாதணிகள் அணிந்து செல்லும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

★ நோயாளியின் உடமைகளை பாதுகாப்பாக வைத்து கொடுத்தல் வேண்டும்.

★ நோயாளரின் முகவரி, குடும்பவிபரம் என்பவற்றையும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

★ மருத்துவமனையில் பாவிக்கும் உங்கள் ஆடைகளை வீடு சென்றதும் நன்றாக அவித்து சவர்க்காரமிட்டு கழுவுதல் வேண்டும்.


வெளியீடு
சமுதாய மருத்துவ துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
தை 2002.

Printed by HariKanan Printers, Jaffna

அனுசரணை

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர்
பராமரிப்பு சேவை,
யாழ். தெற்குப் பிரதேசம்,
போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.